Tamil

# உடல் நல மற்றும் பாதுகாப்பு ஆட்கள் எனது வர்த்தக நிலையத்திற்கு வருவது – ஏன்?

# (The health and safety people visit my business – Why?)

உடல் நல மற்றும் பாதுகாப்பு ஆட்களும் (HSE) உள்ளூர் அதிகாரசபையினரும் வேலை செய்பவர்களினதும் வேலைத்தள செயற்பாடுகளால் பாதிக்கப்பட்டவர்களதும் பொதுமக்களதும் உடல்நலத்தைப் பாதுகாப்பை நலன்களைப் பேணுவதில் பொறுப்புக்களைப் பகிர்ந்து கொள்கின்றனர். .

நாங்கள் உடல்நலம் மற்றும் பாதுகாப்பு என்பன நாகரீக சமுதாயத்தின் மூலைக்கல்லாக அமைந்து வேலைத்தள உடல்நலம் பாதுகாப்பு ஆகியவற்றில் சாதனைகளை ஏற்படுத்தி (எமக்கு ஏற்கனவே வேலைத்தளப் பாதுகாப்பில் சிறந்த சாதனையாளர் என்ற நிலை உண்டு) உலகில் தலைமை நிலையில் திகழ வேண்டும் என்பது எமது விருப்பு. இதற்காக நாங்கள் வர்த்தகர்கள் வேலையாட்கள் அவர்களுடைய தொழிற்சங்கங்கள் ஆகியோருடன் பங்காளிகாளக உழைக்க விரும்புகின்றோம். நாங்கள் தேசியமட்டத்திலும் உள்ளூர் மட்டத்திலும் அறிவுரை வழிகாட்டல் மற்றும் தகவல்களை வழங்குகிறோம்.

அத்துடன் தனிப்பட்ட வர்த்தக நிலையங்களுக்குச் சென்று எங்களுடைய நோக்கை அடைவதற்கு உதவி வருகின்றோம். உடல் நல மற்றும் பாதுகாப்பு ஆட்களும் (HSE)
உள்ளூர் அதிகாரசபையினரும் எந்தவொன்றுக்குச் செல்வதென எவ்வாறு முடிவுசெய்கிறோம்? யார் ஆபத்தில் உள்ளனர் என்ற அடிப்படையிலேயே இதனைச் செய்கின்றோம். எங்கு ஆபத்துக்கள் அதிகமாக கூடுமோ எங்கு அதிக தாக்கங்கள் ஏற்படக்கூடுமோ அங்கு எங்களுடைய வேலையை அதிகரிக்கின்றோம். குறிப்பாக எங்கு பின்வரும் நிலைமைகள் உள்ளதோ அங்கு எங்களுடைய வேலையை அதிகப்படுத்துவோம் :

- எங்களுக்கு உங்கள் வர்த்தகத்திலோ அல்லது பகுதியிலோ **உடல்நல மற்றும் பாதுகாப்பு குறைவாக உள்ளது** எனச் சான்றாதாரங்கள் கிடைக்கும் பொழுது அப்படியில்லாவிடில் நீங்கள் செய்யும் வேலையின் தன்மையினால் அதிக அளவில் விபத்துக்களோ அல்லது சுகவீனங்களோ ஏற்பட்டால் எங்களுடைய வேலையை அதிகப்படுத்துவோம். உங்களுடைய வர்த்தக நிலையத்திற்கு எங்களுடைய அலுவலர்கள் வரும்பொழுது ஆபத்தினை தேசிய உடல்நல மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்களுக்கு ஏற்ப முன்னுரிமை கொடுத்து ( உதாரணத்திற்கு ஒருவர் கீழே விழுந்து இருந்தால் அவர் உயரே இருந்தா அல்லது எந்த நிலையில் இருந்து விழுந்துள்ளார் என) அடையாளம் காண்பர். இதற்கு காரணம் எங்கள் அலுவலர்களுக்குத் தேசிய மட்டத்தில் உடல்நல மற்றும் பாதுகாப்பு செயற்பாடுகளை பேணும் பாரிய பொறுப்பு உள்ளது.
- **நீங்கள் ஆபத்துக்களை விளைவிக்க கூடிய கைத்தொழில்களில் ஒன்றைச் செய்பவராக இருந்தால்** (உதாரணமாக கடலுக்கு அண்மையாக அமைந்த வர்த்தகநிலையங்கள் கடல்கடந்த வர்த்தகங்கள் அணுஉலைகள் அணுசக்திகள் தொடர்பான வர்த்தகங்கள் தொங்கிக் கொண்டு அல்லது வழுக்கக்கூடிய நிலையில் தொழில் செய்யும் வர்த்தகங்கள் மற்றும் சில இரசாயனப்பொருட்கள் வெடிமருந்துகள் என்பனவற்றை உள்ளடக்கிய வர்த்தகங்கள்) எங்களுடைய வேலையை அதிகப்படுத்துவோம். பொதுவாக இப்படியான வர்த்தகங்கள் பாதுகாப்பு கவசம் அமைக்கப்பட்டு அல்லது அனுமதியளிக்கப்பட்ட பிரதேசங்களில் தான் இடம்பெறுதல் வேண்டும். இதனால் உங்களுடைய வேலையாட்களும் பொதுமக்களும் அபாயங்களுக்கு உள்ளாகாதவாறு நீங்கள் எவ்வாறு ஆபத்து விளைவிக்க கூடியனவற்றை அடையாளம் கண்டு கட்டுப்படுத்தக் கூடிய பாதுகாப்பு கவசத்தினை ஏற்படுத்தியுள்ளீர்கள் என்பதை எங்கள் அலுவலர்கள் முன் மதிப்பீடு செய்ய வேண்டியவர்களாக உள்ளனர். எங்களுடைய அலுவலர்கள் உங்கள் வர்த்தகத்தை பார்வையிட வருகையில் நல்ல முறையில் உடல்நல மற்றும் பாதுகாப்பு கலாச்சாரத்தைப் பேணுவதற்கு தகுந்த வகையிலும் ஆற்றலாகச் செயற்படும் விதத்திலும் பொறியியல் ரீதியாகவும் செயற்பாட்டு ரீதியாகவும் பல்வேறு கட்டுப்பாட்டு முறைகளையும் அமைத்துள்ளீர்களா என்பதற்கான உறுதிப்பாடுகளை தேடுவார்கள்.
- நாங்கள் **முறைப்பாட்டை அல்லது குறித்த ஒரு சம்பவத்தை விசாரிப்பதற்காக** (விபத்தாகவோ அல்லது வேலை தொடர்பான சுகயீனமாகவோ ) எங்களுடைய வேலையை அதிகப்படுத்துவோம். மிக அதிகப்பாதிப்பை தரும் சம்பவங்கள் – மரணத்தை அல்லது பாரிய உடற்காயங்களை ஏற்படுத்தக் கூடிய சம்பவங்கள் அல்லது தேசிய உடல்நல மற்றும் பாதுகாப்பு முன்னேற்றங்களுடன் தொடர்புடையன என்பன

குறித்தே எங்கள் கவனங்களும் முன்னுரிமைகளும் அமையும். எங்களுடைய பரிசோதகர்கள் என்ன தவறு நடந்தது என்பதை கண்டறிந்து அதிலிருந்து கிடைக்கும் படிப்பினைகளால் உங்களுடைய வர்த்தகத்திற்கும் உங்களுடைய வர்த்தகம் போன்ற வர்த்தகங்களைச் செய்யும் மற்றவர்களுக்கும் உதவ முயற்சிப்பர்.

உடல் நல மற்றும் பாதுகாப்பு ஆட்களும் (HSE) உள்ளூர் அதிகாரசபையினரும் வரையறுக்கப்பட்ட எண்ணிக்கையில் உங்கள் வர்த்தக நிலையத்திற்குப் பின்வருவனவற்றுக்காகவும் விஜயம் செய்வர்.

- புதிய வர்த்தகத்தை அல்லது இடத்தை ஆபத்து விளைவிக்கக் கூடிய தன்மைகள் குறித்து மதிப்பீடு செய்வதற்காக விஜயம் செய்வர்.
- சில குறித்த புவியியல் பிரதேசங்களில் அல்லது பகுதிகளில் பொதுவாக கழிவுப் பொருட்களைச் சேமித்து வைத்தல் மற்றும் வேலைத்தள போக்குவரத்துப் பிரச்சினைகள் போன்ற சில குறித்த பிரச்சினைகளுக்கு முன்னுரிமை கொடுத்து விஜயம் செய்வர்.
- சில முறைப்பாடுகள் குறித்து நேரடிப் பரிசோதனைக்காகவும் வருவர்.
- பக்கம் பக்கத்தில் அல்லது எதிர் எதிரில் அமையும் புதிய அபிவிருத்திகளை செயல்முறைகைளப் பார்வையிட அல்லது பயிற்சிகளை அளிக்கும் நோக்குகளிலும் விஜயம் செய்வர்.

**பன்முக இடத் தொழில் முயற்சிகளில் ( Multi-site enterprises)** தனித்தனியாக இடங்களை கவனத்தில் எடுக்காது **நாங்கள் முழு வர்த்தகத்தையுமே கவனத்தில் கொண்டு** திரும்பவும் திரும்பவும் செய்தல் செய்ததை மறுபடி செய்தல் ஆதியன ஏற்படாது தவிர்த்து எவ்வாறு முரண்பாடுகளில்லாத வகையில் சிறந்த தரத்தை அடைந்துள்ளீர்கள் என்பதையே எங்கள் இலக்காகக் கொள்வோம். அதே வேளை உள்ளூர் அதிகாரசபையினர் தேசிய மட்டத்தில் ஏற்றுக்கொள்ளப்பட்ட முன்னுரிமைகளுக்கும் விபத்துக்கள் முறைப்பாடுகள் என்பவற்றுக்கும் பதில் காண்பதைத் தங்களுடைய இலக்காகக் கொள்வர். மேலும் உள்ளூர்ச் சமுதாயத்திற்கு முன்னுரிமை கொடுத்து பிரச்சினைகளை அணுகுவர்.

எங்கள் விஜயம் என்ன காரணத்திற்காக அமைந்தாலும் நாங்கள் உங்களுடைய வர்த்தகதத்தின் உடல்நல பாதுகாப்பு நலன்களை பரிசோதித்து மக்கள் எவ்வாறு சுகயீனமடையாமல் காயமடையாமல் பாதுகாக்கப்படலாம் என்பது குறித்து ஆலோசனைகள் வழங்குவோம்.

வேலைத்தளத்தில் உள்ள எல்லா ஆபத்து விளைவிக்கக் கூடியவற்றையும் களைந்து விட முடியுமென நாங்கள் நம்பவில்லை. அதற்குப் பதிலாக நாங்கள் நீங்கள் அர்த்தமுள்ள செயற்பாடுகளை மேற்கொண்டு உங்கள் உடல்நலத்திற்கும் பாதுகாப்புக்கும் ஆபத்து விளைவிக்க கூடியவற்றை குறைத்துள்ளீர்களா என்பதையே பார்க்க விரும்புகின்றோம். தேவையேற்பட்டால் உதாரணமாக எங்கே நிலைமை மிக மோசமாக உள்ளதோ அல்லது சட்டம் வேண்டுமென்று புறக்கணிக்கப்பட்டுள்ளதோ அங்கு எங்கள் அலுவலர்கள் தங்கள் அதிகாரத்தைப் பயன்படுத்தி முன்னேற்றங்களை ஏற்படுத்துமாறு கோருவர். தேவையேற்படின் வழக்குத் தொடுத்தல் போன்ற சட்டநடவடிக்கையையும் எடுப்பர்.

நாங்கள் எதற்காக உங்கள் வர்த்தக நிலையத்திற்கு வருகின்றோம். எப்படி முன்னுரிமைகள் கொடுக்கின்றோம். உங்களுடைய வர்த்தகத்திற்கு உதவியாக நாம் என்ன செய்கின்றோம் என்பதையெல்லாம் இந்த விளக்கங்களால் கண்டறிந்திருப்பீர்கள் என நம்புகின்றோம். இது உங்களுக்கு பயன்பட்டு உள்ளதா தெளிவினை அளித்துள்ளதா என்பது குறித்து உங்கள் பிரதிபலிப்புக்களை எங்களுக்கு அறியத்தரவிரும்பினால் உங்கள் கருத்துக்களை business.involvement.team@hse.gsi.gov.uk என்ற மின்அஞ்சல் முகவரிக்கு அனுப்பி வையுங்கள்.